**பக்கம் 1:**
மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான்
# அவர்கள் விண்ணப்பத்தை
# கேட்டேன்

**உலகளாவிய ஜெப கையேடு**

மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜெபம்

இன்னும் சிக்கிக்கொண்டிருப்பவர்கள்

நீதி, நம்பிக்கை மற்றும் அன்பின் ஆண்டவர், திக்கற்றோரின் தகப்பன், ஒடுக்கப்பட்டோரின் பாதுகாவலர், வரவிருக்கிற ஆண்டுகளில் எங்கள் நம்பிக்கை. நாங்கள் செழிப்புடனும் நன்மையுடனும் வாழ, அன்பின் மூலம் ஒருவருக்கொருவர் சேவை செய்ய நீர் எங்களை விடுதலையாக்கியிருக்கிறீர்.

அன்புள்ள ஆண்டவரே,

இந்த நேரத்தில் நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்ட எங்கள் சகோதர சகோதரிகள், ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர் சிறுமியரோடு நிற்க்கிறோம். அவர்களின் காயம் வலி, வேதனை, பயம், அலமானம் மற்றும் அவர்கள் அனுபவிக்கும் அனைத்தையும் நீர் உணருகிறீர் என்பதையும் அறிவோம்.

ஆண்டவரே, அவர்களை ஒடுக்குகிறவர் கைகிலிருந்து விடுவித்து, துன்மார்க்கர் கையிலிருந்து மீட்டு, உமது கிருபையால் அவர்கள் வாழ்க்கையை வெளிச்சத்திற்கு கொண்டு வருமாறு வேண்டுகிறோம். அவர்களை குணப்படுத்தி நீதியளித்து கடத்தல்காரர்கள் மனந்திரும்பி உம்மை அறிந்துக்கொள்ள உதவிசெய்யும்.

அடிக்குறிப்பு
1. உலகளாவிய ஜெப கையேடு

பக்கம் 2:

நீதிக்காக நாங்கள் தொடர்ந்து போராட உமது புனிதமான அன்பினாலும் ஆர்வத்தினாலும் எங்களை நிரப்புங்கள். இந்த மனித இக்கட்டை முடிவுக்கு கொண்டுவர எங்களை ஒரு கருவியாக பயன்படுத்தும். ஊம்முடைய அன்பும் அரவணைப்பும் பாதிக்ப்பட்வர்களைவிட்டு ஒருபோதும் நீங்காதிருப்பதாக. பரலோக தேவனை எங்கள் ஜெபத்தையும் விண்ணப்பத்தையும் கேளும்.

ஆமென்.

ஜாய் இமே சண்டே, நைஜீரியா மாகாணம்.

கடத்தலிலிருந்து உயிர் பிழைத்தவர்களுக்காக ஜெபம்
கடத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்

மலைக்கா ஓரிங்கோ, கடத்தலிலிருந்து உயிர் பிழைத்தவர்களுக்காக உலகளாவிய நிபுனர் பகிர்வது, “அடிமைத்தனத்திலிருந்து உயிர் பிழைத்த அனைவரும் நம்பிக்கையை இழக்காதீர், இயேசு தன் வாக்குறுதியில் உண்மையுள்ளவர். கடத்தலிலிருந்து உயிர் பிழைத்தவனாக என் ஜெபத்தை அவர் கேட்டார். நீங்கள் ஒரு போதும் தனியாக இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதோ உங்களுக்காக எங்கள் ஜெபம்”

அவர்களின் விண்ணப்பத்தை நாங்கள் கேட்கிறோம். கடத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் கடத்தலிலிருந்து உயிர் பிழைத்தவர்களுக்காக ஜெபம் செய்ய ஒன்றிணைந்துள்ளனர். ஆவர்களின் நம்பிக்கை மற்றும் மறுவாழ்விற்காக ஜெபிக்கிறோம். உயிர் பிழைத்தவர்களின் அழுகையை கேட்டு உணர்கிறோம். அடிமைத்தனத்திற்கு பிறகும் எத்தனை பேர் அந்த அதிர்ச்சியில் இருக்கிறார்கள் என உணர்கிறோம்.

ஆண்டவரே, அவர்களின் உள்ளான சமாதானத்திற்கான ஜெபத்தை கேளும். உடைந்த உள்ளத்தோடு உமக்கு முன்பாக நிற்கிறோம், தாங்களாகவே குணமடையாத அளவுக்கு காயங்களோடு இருக்கின்ற உயிர் பிழைத்தவர்களுக்காக ஜெபம் செய்கின்றோம். பழைய நினைவுகளின் வலிகளோடு இருக்கிறவர்களை குணப்படுத்தும்.

நம்பிக்கைகுரிய இரக்கமுள்ள ஆண்டவரே, மக்கள் நல்லவர்களாகவும், அன்பானவர்களாகவும் இரக்கமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என

நம்பும் காயப்பட்ட ஆத்துமாக்களின் விண்ணப்பத்தை கேளும். உயிர் பிழைத்தவர்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரோடு உறவை மீட்டெடுக்கவும், மனச்சோர்வு கவலை நீங்கி நம்பிக்கையுடன் வாழவும் அவர்களின் ஜெபத்தை கேளும்.

மலைக்கா ஓரிங்கோ, நெதர்லாந்து, செக் குடியரசு மற்றும் சுலோவோக்கியா மாகாணம்.

இரண்டு பக்கங்களில்

" அடிமைத்தனத்திலிருந்து பிழைத்வர்களீ நம்பிக்கையை இழக்காதீர். கர்த்தர் தம் வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர்"

அடிக்குறிப்பு

2. உலகளாவிய ஜெப கையேடு

பக்கம் 3:

மறுசீரமைப்பின் நீதிக்கான ஜெபம்

நீதியுள்ள தேவனே, நவீன அடிமைத்தனம் மற்றும் சுரண்டலினால் பாதிக்கப்பட்வர்களின் அழுகையை கேட்கிறோம்.

பாதுகப்பற்றவர்களுக்கும், சுரண்டலினால் பாதிக்கப்பட்வர்களுக்கும், மறக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்க ஆவலாயிருக்கிறோம்.

வெளிச்சத்தின் தேவனே நவீன அடிமைத்தனம் மற்றும் சுரண்டலினால் பாதிக்கப்பட்வர்களுக்கு உடனடி நீதி கிடைக்க வேண்டுகிறோம்.

நாங்கள் நீதியை விரும்புகிறோம். குற்றவாளிகள் தாங்கள் செய்த தவறுக்கு பிராயசித்தம் செய்ய வேண்டுகிறோம். ஆவர்களின் இருதயத்ததை நீதியின் ஒளியினால் நிரப்பி அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளில் இருந்து மனந்திரும்ப உதவிசெய்யும்.

அவர்கள் மனிதகுலத்ததை பாதிக்கிற செயல்களில் ஈடுபடுவதை விட்டு தங்களை தாமே மாற்றிகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

இப்படியாக நாங்கள் ஜெபிக்கிறோம். ஆமென்.

இம்மானுவெல் வடாகா, உகாண்டா மாகாணம்.

உலகளாவிய சபைக்கான ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, சர்வ வல்லமையுள்ளவரே, விடுதலையின் நாயகனே,

நம்மைசுற்றி காணப்படாத கேட்கப்படாத அவநம்பிக்கையான சூழ்நிலைகளில் பல ஜனங்கள் உள்ளனர்.

ஏன்னுடைய 13 ம் வயது முதல் நான் விபச்சாரத்துக்கு கட்டாயப்படுத்தப்பட்டேன்….. இனி என்னால் தாங்க முடியாது….. யார் எனக்கு உதவி செய்ய முடியும்?

உங்கள் அழுகையை நாங்கள் கேட்கிறோம்!

பணம் சம்பாதிப்பதற்காக என் பெற்றோரால் நான் வெளிநாட்டிற்கு அனுப்பபட்டேன். ஆனால் எனக்கு சம்பளம் கிடைக்கவில்லை மற்றும் மோசமாக நடத்தப்பட்டேன்.. இனி என்னால் தாங்க முடியாது….. யார் எனக்கு உதவி செய்ய முடியும்.?

உங்கள் அழுகையை நாங்கள் கேட்கிறோம்!

அடிக்குறிப்பு

3. உலகளாவிய ஜெப கையேடு

பக்கம் 4:

நான் குடும்ப வன்முறையிலிருந்து தப்பிக்க கணவரிடமிருந்து ஒடி விட்டேன். என் குழந்தைகளை பராமரிக்க ஏதாவது ஒரு வேலையை தேடிக்கொண்டிருக்கிறேன். இந்த மனிதன் வழங்கும் வேலை பாதுகப்பற்றதாக தெரிகிறது. ஏன்னிடம் பணமில்லை. நான் பயந்திருக்கிறேன். ஏன்ன செய்வதென்று தெரியவில்லை.. யார் எனக்கு உதவி செய்ய முடியும்.?

உங்கள் அழுகையை நாங்கள் கேட்கிறோம்!

கலினா கெட்ராய், ஐரோப்பிய கிழக்கு மாகாணம்.

இரட்சணிய சேனையின் உலகளாவிய நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முயற்ச்சிகளுக்கான ஜெபம்

பரம தகப்பனே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலர்கள் ஜெபித்ததை போல நம்பிக்கையுடன் ஜெபிக்கிறோம். கட்டாய உழைப்பு மற்றும் பாலியல் சுரண்டலினால்

பாதிக்கப்பட்டவர்களுக்கான எங்கள் ஜெபத்தை கேட்பீர் என்று விசுவாசிக்கிறோம்.

ஒடுக்கப்பட்ட ஆதரவற்ற இருளிலிருக்கும் மக்களுக்கு நீர் நம்பிக்கை மற்றும் அமைதியின் ஒளியாக பிரகாசிக்க வேண்டுகிறோம். வறுமையிலும் அடிமைதனத்திலும் இருக்கின்ற கடவுளின் குழந்தைகளின் சங்கிலிகளை உடைத்து விடுதலையின் ஆசீர்வாதம் மற்றும் மதிப்புள்ள ஆரோக்கியமான வாழ்க்கை வாழ செய்யும்.

கடவுளே, கட்டாய உழைப்பு மற்றும் பாலியல் சுரண்டலினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பணி செய்பவர்களுக்கு தைரியத்தை கொடும். ஊலகில் அநீதியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பணி செய்பவர்களின் ஆன்மா, இதயம் மற்றும் சரீரம் போன்றவற்றை உற்சாகப்படுத்தும்.

ஏல்ரோயி ஏங்களுடைய ஜெபத்தை கேட்டதினால் உமக்கு நன்றி. ஆனைவரின் சுதந்திரம் மற்றும் நீதிக்கான குரல் எழும்பும் போது எங்கள் இருதயத்தை ஒன்றாக்கும்.

எங்களுடைய ஜெபத்தை கேட்டதினால் உமக்கு நன்றி.

ஆமென்.

கமிஷனர் ஷெல்லி ஹில், அமெரிக்கா மற்றும் கரீபியன் மாகாணம்.

அடிக்குறிப்பு

4. உலகளாவிய ஜெப கையேடு

பக்கம் 5:

அர்ப்பணிப்பின் ஜெபம்

மற்றவர்களின் நன்மைக்காக கடத்தப்பட்டு அடிமையாக்கப்பட்டு இருளுக்கு அப்பால் இருக்கின்ற மகன் மற்றும் மகள்களின் அழுகையை கேட்கிறேன்.

நான் உங்களுடன் நிற்கிறேன்

உலக சந்தோஷத்திற்காக பாதிக்கப்படுகிற அடுத்த தலைமுறை குழந்தைகளை காண்கிறேன்.

நான் உங்களுக்காக போராடுவேன்.

அடிமைதனத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் தப்பிபிழைப்பவர்களின் நலனுக்காக போராடும் முன்கள பணியாளர்களுடன் இணைந்து நிற்கிறேன்.

நான் உங்களை ஏற்றுக் கொள்கிறேன்.

எனது அறியாமை, சிறப்பரிமை மற்றும் செலவு செய்யும் மூலம் நான் அறிந்தும் அறியாமலும் நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலுக்கு பங்களித்திருப்பதை நினைத்து புலம்புகிறேன்.

நான் பார்வையற்றவனாக இருக்க மறுக்கிறேன்.

அநீதிக்கு எதிராக என்னுடைய மற்றும் உங்களுடைய ஜெபங்களும் இணைந்து செயலாக மாறட்டும்.

நாம் அனைவரும் ஒளியை அனுபவிக்கும்வரை நாம் சும்மாயிருக்கவில்லை.

ஜீன் நான்ங்வாலா, ஜாம்பியா மாகாணம்.

இரண்டு பக்கங்களில்

“அநீதிக்கு எதிராக என்னுடைய மற்றும் உங்களுடைய ஜெபங்களும் இணைந்து செயலாக மாறட்டும்.”

அடிக்குறிப்பு

5. உலகளாவிய ஜெப கையேடு